DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : ஸ்ரீராம் | Father/Husband Name : ஆதிமூலம் |
| Age : 50 | Village : வெங்கடாச்சலபுரம் |
| Taluk : | Calling : ஆட்டோ ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9 Mar 2026 11:27

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் வெங்கடாச்சலபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சாத்தூர் ரயில் நிலைய ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன்.

2. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u> -

3. கடந்த 09.12.2022 ம் தேதி 13.45 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -** இல்லை.</u>

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கார்த்திகேயன் | Father/Husband Name : சுந்தரமூர்த்தி |
| Age : 43 | Village : குமரெட்டியாபுரம் |
| Taluk : | Calling : எலக்ட்ரீசியன் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9 Mar 2026 11:39

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :–

1. நான் குமரெட்டியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன்.

2. கடந்த 2021 ம் வருடம் போலீசார் சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் வைத்து ஹிரோஹோண்டா இருசக்கர வாகனம் திருட்டு வழக்கு சம்பந்தமாக என்னிடம் ஒரு ஆவணத்தில் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்னுடன் மாரீஸ்வரன் என்பவரும் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

3. நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்தவொரு ஆவணத்தையும் அதன் உள்ளடக்கத்தை படித்து பார்க்காமல் கையெழுத்து செய்யக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசாரிடம் நான் அவர்கள் அளித்த ஆவணத்தில் கையொப்பம் செய்தபோது இவ்வழக்கின் எதிரி ஜப்பான் என்பவரை போலீசார் கைது செய்து வைத்திருந்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. கடந்த 29.12.2021 ம் தேதி 15.30 மணியளவில் போலீசார் இவ்வழக்கின் எதிரி சுபாஷ் என்ற ஜப்பான் என்பவரை கைது செய்து அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றபோது அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மாரீஸ்வரன் | Father/Husband Name : முனியசாமி |
| Age : 53 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : மெக்கானிக் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9 Mar 2026 11:31

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :–

1. நான் சாத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன்.

2. எனக்கு இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னர் சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் வைத்து போலீசார் சாட்சிக்காக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். நான் அவர்கள் தயார் செய்த ஆவணத்தில் கையொப்பம் செய்யும் போது என்னுடன் கார்த்திகேயன் என்பவரும் உடனிருந்தார். என்னிடம் காட்டப்படும் எதிரி சுபாஷ் என்ற ஜப்பான் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்கும்போது ஹீரோ ஹோண்டா இருசக்கர வாகனம் திருடுபோனது சம்பந்தமாக என்னிடம் தகவல் கூறினார். அந்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை நான் படித்து பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை** –

3. நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்தவொரு ஆவணத்தையும் அதன் உள்ளடக்கத்தை படித்து பார்க்காமல் கையெழுத்து செய்யக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசாரிடம் நான் அவர்கள் அளித்த ஆவணத்தில் கையொப்பம் செய்தபோது இவ்வழக்கின் எதிரி ஜப்பான் என்பவரை போலீசார் கைது செய்து வைத்திருந்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. கடந்த 29.12.2021ம் தேதி 15.30 மணியளவில் போலீசார் இவ்வழக்கின் எதிரி சுபாஷ் என்ற ஜப்பான் என்பவரை கைது செய்து அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றபோது அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur